2020 செப்டம்பர் 14]

மறைந்த திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் இந்தியாவின் 13–வது குடியரசுத் தலைவராகப் பணியாற்றியவர். பாராளுமன்ற உறுப்பினராக மக்களவையிலும், மாநிலங்களவையிலும் திறம்பட பணியாற்றியதோடு, நிதித் துறை, பாதுகாப்புத் துறை, வெளியுறவுத் துறை மற்றும் வர்த்தகத் துறை ஆகிய துறைகளின் மத்திய அமைச்சராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா, சென்னை உயர் நீதிமன்றத்தின் 150–வது ஆண்டு நிறைவு விழா, இந்திய திரைப்பட நூற்றாண்டு விழா உள்ளிட்ட பல்வேறு விழாக்களில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடன் தலைமை விருந்தினராகப் பங்கேற்று சிறப்பித்தவர். இந்திய அரசின் உயரிய விருதுகளான 'பாரத ரத்னா' மற்றும் 'பத்ம விபூஷன்' போன்ற விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர் ஆவார்.

இப்பெருந்தகையின் மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

(ஆ) திரு. ஜெ. அன்பழகன், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *"2001 முதல் 2006 வரை தியாகராய நகர் தொகுதியிலிருந்தும், 2011 முதல் 2016 வரை மற்றும் 2016 ஆம் ஆண்டு முதல் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அனைவரும் பாராட்டும் வகையில் சிறப்புடனும், திறம்படவும் பணியாற்றியவரும், தனது தொகுதி மக்களுக்கு தொண்டு செய்வதில் மிகுந்த அக்கறை கொண்டவருமான திரு. ஜெ. அன்பழகன் அவர்கள் 10–6–2020 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

அன்னாரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

(இ) திரு. H. வசந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *"தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், 2006–2011 மற்றும்*

2020 செப்டம்பர் 14]

2016–2019 ஆகிய ஆண்டுகளில் நாங்குநேரி தொகுதியிலிருந்து இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 2019 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மக்களவைத் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றியவரும், தனது தொகுதி மக்களுக்குத் தொண்டு செய்வதில், தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவருமான திரு. H. வசந்தகுமார் அவர்கள் 28–8–2020 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இப்பெருந்தகையின் மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.”

(ஈ) கொரோனா வைரஸ் நோய்த் தொற்று காரணமாக உயிரிழந்தவர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: “உலகையே ஆட்டிப் படைக்கும் கொரோனா வைரஸ் பெருந்தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு, ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

தங்களது இன்னுயிரையும் துச்சமெனக் கருதி, கொரோனா தடுப்புச் சேவையில் ஈடுபட்ட மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த ஊழியர்கள் அனைவரின் சேவை எந்நாளும் நினைவுகூரத்தக்கது.

இக்கொடிய நோய்த் தொற்றின் காரணமாக உயிரிழந்தவர்களுக்கும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது உயிரிழந்த முன்களப் பணியாளர்களுக்கும் அஞ்சலியை தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.”

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது தங்கள் இன்னுயிரை இழந்த முன்களப் பணியாளர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மற்றும் கொரோனா வைரஸ்